**ஜனவரி - 24**

**"கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்." - நீதி 3:3**

அன்பைப்பற்றிய கட்டளைகளில் நீதிக்கு முதல் பங்கு இருந்தாலும், அது இறுதியில் வேண்டுவது நீதி அல்ல. அது வேண்டுவது நீதிக்கும் அப்பால் உள்ள கடும் நீதியும் அல்ல அதுதான் இரக்கமும், மன்னிப்பும். அதை செய்யத்தான் நம் அன்பு நம்மைத் தூண்டும். கிரியை செய்ய ஏவும். இப்படி நாம் இரக்கம் செய்ய முன் வருகையில் மறுபடியும் நாம் தேவ அன்பைத்தான் மாதிரியாக எடுத்துக் கொள்ளுகிறோம். எனவே பிறரோடு நாம் பழகும் போது நாம் இந்த முக்கிய அம்சத்தை நினைவில் கொள்ளுதல் வேண்டும். அவர்களும் நம்மைப்போல் வீழ்ந்து போனவர்கள் தான் அவர்களிடத்திலும் குறைபாடுகள் உண்டு. எனவே அவர்களிடத்திலும் நாம் நேர்மையாக நடந்து கொள்ளுவது மாத்திரமல்ல, கூடுதலாக நாம் அவர்கள் மேல் இரக்கமும் அன்பும் காட்ட வேண்டும். பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும். நன்றி கெட்டவர்களாக இருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது அவர்களிடத்திலும் அன்பாயிருத்தல் வேண்டும். அப்படிச் செய்யும்போது நாம் பரம பிதாவின் குழந்தைகளாக இருக்க நம்மை ஏற்றவர்களாக்கிக் கொள்கிறோம். **- Z ’02, 171 (R 3020).**

சத்தியம் என்பது தேவனுடைய வார்த்தையாகும். இரக்கம் என்பது இன்றைய நாட்களில் துயரத்தில் இருப்போருக்கு நாம் காட்டும் பரிவுதான் தேவனின் வார்த்தையாகும். இதைவிட சிறந்த ஆபரணம் ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவைப்படாது. இது போன்ற கிறிஸ்தவ குணலட்சணங்களைப் பெறுவது தான் ஒருவரது ஆபரணமாகும். அன்பிற்காக இரக்கமும் சத்தியமும் நம் இருதயங்களில் உறுதியாக இடம் பெற்றிருத்தல் வேண்டும். இக்குணங்கள் நம் மனதில் எப்போதும் வசீகரிக்கும் ஆபரணமாகத் திகழ வேண்டும். இந்தப் பண்பு நம்மில் இருப்பதன் மூலம் அது மற்றவர்களை கவர வேண்டும். மற்ற எல்லா நற்குணங்களைப் பார்க்கிலும் இந்த இரக்கக் குணம் கூடுதலாக நம்மில் ஒளி விடவேண்டும். **- P ’34, 189.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 37:26; 85:10; நீதி 11:17; 14:21,22,31; 20:28; 21:21; ஓசி 4:1; 12:6; மீகா 6:8; மத் 5:7; 23:23; லூக் 6:36; ரோம 12:8; கொலோ 3:12,13; யாக் 2:13; நீதி 23:23; சகரி 8:16,19; 1கொரி 13:6; எபே 4:25; 2கொரி 6:7,8; ரோம 2:8; கலா 3:1; 2தெச 2:10.

**கோபுர வாசிப்பு :** Z ’13, 275 (R 5309).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் கிருபையையும் சத்தியத்தையும் பற்றிப்பிடித்து அதைச் சார்ந்திருந்து அதை அப்பியாசித்தேனா? எப்படி? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தவை என்ன? பலன் என்ன?